மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 54/2024

பெயர் : தேவி
சாட்சி – வா.சா–1 நாள்: 24.03.2026

---

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பு)**

1. நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் தேசிங்கு என்பவரின் தந்தை பெயர் ராமன் ஆகும். எனது முதல் விசாரணை சாட்சியத்தில் எனது கணவரின் தந்தை பெயர் ராமாகவுடர் என்கிற கே.வி.ராமன் என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது கணவரின் தந்தை மற்றும் தாயார் ராமாகவுடர் என்கிற கே.வி.ராமன் மற்றும் பட்டியம்மாள் ஆகியோர்களது வாரிசு சான்றிதழ்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. எனது கணவரின் பெற்றோர் பற்றிய தகவல்களை இந்த வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவர்களது வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை போன்ற ஆவணங்களை தாக்கல் செய்தள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது வாக்காளர் அட்டை நான் தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் தேசிங்கு என்பவருக்கும் திருமணம் நடைபெற்றதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன். நான் எனது நிரூபன வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். எனது கணவர் எத்தனை ஆண்டுகள் அரசு ஊழியராக பணிபுரிந்தார் என்றால் சுமார் 35 ஆண்டுகள் பணிபுரிந்தார்.

3. எனது கணவர் அரசு ஊழியர் என்பதற்கான பணியாளர் அடையாள அட்டையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் அவர் பணிபுரியும் இடத்தில் நிரந்தர முகவரியாக எங்கள் வீட்டு முகவரியை தான் கொடுத்துள்ளார். எனது நிரூபன வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு தீபாவளி சமயத்தில் திரும்பி வராததார்காக கடிதம் அல்லது தொலைபேசி மூலம் எனது கணவரை

தொடர்பு கொண்டோமா என்றால் நேரில் சென்றே பார்த்தோம். எப்போது சொன்றோம் என்றால் நவம்பர் 2011ல் சென்றோம். அப்போது அலுவலகத்தில் எனது கணவர் இரண்டு மூன்று மாதங்களாகவே அலுவலகத்திற்கு வரவில்லை என்று சொன்னார்கள்.

4. எனது கணவரை காணவில்லை என்று கடந்த 24.11.2011 தேதியில் பல்லடம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். நான் கொடுத்த புகாருக்கு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எண் என்ன என்று எனக்கு நினைவில் இல்லை. 2, 3 வாதிகளின் பிறப்பு மற்றும் கல்வி சான்றிதழ்கள் மற்றும் வாக்காளர் அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். வா.சா.ஆ.9 ஆவணம் எனது கணவர் காணவில்லை என்று கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை முடிக்கப்பட்டதற்கான உத்தரவு நகல் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.9 உத்தரவில் எனக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். எனது கணவர் காணாமல் போனதற்கான புகார் கொடுப்பதற்கு முன்பாக நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பின்னர் துண்டு பிரசுரங்கள் அடித்து விநியோகம் செய்யப்பட்டது. அந்த துண்டு பிரசுரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். 1, 2 பிரதிவாதிகள் அரசு ஊழியர்கள் என்பதால் அவர்களுக்கு இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக கொடுக்கப்படவேண்டிய அறிவிப்பு கொடுக்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.03.24 18:20:54 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.